உ
சிவமயம்



யாழ்/சங்கானை மாலியவத்தை
உயர் சைவ வேளாண்குல

# திருமதி சே.நாகேஸ்வரி

அவர்களின்

# நினைவு மலர்

28-10-2001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/859.

அமரர் திருமதி

# சேனாதிராசா நாகேஸ்வரி

அவர்கள்




**திதிவெண்பா**

ஆண்டு விஷுபுரட் டாதிமதி பூர்வபக்கம்
பூண்ட நற்தசமிப் பொன்னாளில் ஈண்டிருந்து
சேனாதி ராசாவின் தேவிநா கேஸ்வரி
வானடைந்தார் மகிழ்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு



சுதந்திரம் வேண்டி காத்திருக்கும் தமிழரின் ஈழத்தினில் செந்தமிழும், சிவநெறியும் சேர்ந்து ஓங்கும் சீர்மிகு யாழ்ப்பாணத்தில், கல்வியிலும், செல்வத்திலும், வீரத்திலும் சிறப்புப் பெற்றுத் திகழும் சங்கானைப் பட்டினத்தில் ஆஸ்பத்திரி வீதி, இத்தியடி வைரவர் கோயிலைச் சேர்ந்த உயர் வேளாளர்குல திரு. திருமதி தம்பு சிற்றம்பலம் (அப்புத்துரை) சிவபாக்கியம் (தங்கமணி) தம்பதிகளிற்கு அருமைப் புதல்வியாகத் தோன்றிய- வர்தான் அமரர் நாகேஸ்வரி அவர்கள். இவர் 08.08.1954ல் இம் மண்ணில் பிறந்தார். அமரர் அவர்கள் தன் சிறு வயதில் தாயை இழந்து துன்புற்று இருந்தபோது அவரது பெரிய தாயாரகிய திரு.திருமதி கந்தையா வள்ளியம்மை அவர்கள் இவரை அன்போடும், ஆசையோடும் அரவணைத்துக் கண்ணை இமை காப்பது போல வளர்த்து வந்தார்கள். மேலும் இவரது மாமன்மாராகிய திரு. சபாபதிப்பிள்ளை அப்பாப்பிள்ளை, திரு. சபாபதிப்பிள்ளை செல்லையா ஆகியோரது உதவி ஒத்தாசைகளுடன் பெரிய தந்தையாராகிய திரு. திருமதி கந்தையா வள்ளியம்மை அவர்களால் செல்லமாக செல்வராணி எனும் செல்லப் பெயர் சூடித் தனது தந்தையாருடன் இன்பமாக வளர்ந்தார். அமரர் அவர்கள் சிறு வயதிலே பல உயிர்த் தத்துக்கள் வந்தபோதும் அவற்றையெல்லாம் செல்வச்சந்நிதியில் கோயில் கொண்டருளிய முருகப் பெருமான் அருளினால் கடந்து வாழும் பேறு பெற்றார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயசாலையில் கற்றுத் தேறினார்.

அமரர் சங்கானை ஆஸ்பத்திரி வீதியினைச் சேர்ந்த உயர் வேளாள குல திரு. திருமதி அரியபுத்திரர் சேதுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாகவும், திருமதி சின்னாச்சிப் பிள்ளையின் பெறா மகனாகவும், சங்கானை ராஜா அச்சகம் இன்ரஸ்ரீஸ் புத்தகசாலை உரிமையாளராகவும் திகழ்ந்த அரியபுத்திரர் சேனாதிராசாவினை 1970ம் ஆண்டு தைப் பூசத் திரு நன்னாளில் கைத்தலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பற்றிக் கொண்டார். அன்னார் அரியரத்தினம், செல்லம்மா, பார்வதி, நாகராசா (அப்பாவர்), சிவபாக்கியம், நாகேஸ்வரி, சரஸ்வதி, செல்வமலர், தனேஸ்வரி, இராணியின் மைத்துனராகவும் விளங்கினார்.

அமரர் 1971ல் சங்கானை மாலியவத்தைக்கருகாமையில் புதிதாக இல்லம் அமைத்து துணைவருடன் இன்பமாக இல்லறத்தில் இணைந்திருந்த இவ் வேளையில் பிரபாகரன் (இலண்டன்), கருணாகரன் (கனடா), சுதாகரன் (உரிமையாளர் சண் பேப்பர் மாட், 203, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13, 249, டாம் வீதி, கொழும்பு-11), சுவர்ணகௌரி (மாணவி யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரைத் தன் புத்திரராக பெற்றதுடன், மருமகளாக புவனலோஜினியையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தார்.

அன்னார் தன் பிள்ளைகளை பட்டதாரிகள் ஆக்க வேண்டும் என்றும், தொழிலதிபர் ஆக்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டார். ஆனால் விதிவசத்தினால் மாற்றமுடியாத நோய் என்று வைத்தியர்கள் சொன்னபோதும், தன் பிள்ளைகளுக்காகவும், கணவனுக்காகவும் கொழும்பு, இந்தியா சென்று முடிந்தவரை வைத்தியம் மேற்கொண்டு கூடிய நாட்கள் தன் பிள்ளைகளுடனும், கணவனுடனும் இன்பமாக இருப்பேன் என எண்ணிப் பல இன்னல்களை அனுபவித்தும் பலனின்றி 26.09.2001இல் அன்னாரின் உடல் சோர்வடைந்து 27.09.2001 நள்ளிரவு 12.50 இற்கு விதியை எவராலும் மாற்ற முடியாது என்ற நியதிக்கேற்பச் சிவபதமடைந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
என்றும் பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில்



கதிர்காமத்திற்கு அருள் வேண்டி
கந்தனின் நினைவுடன் சென்ற நான்
அவனருளால் உன் நினைவுடன் திரும்பினேன்
உன் சம்மதத்துடன் கரம் பிடிக்கும் அவ் வேளைதனில்
உற்றாரால் இடையூறுகள் வந்த போதும்
தளராத மனதோடு எனை மணம் முடித்தாய்
புதுமனை புக வேண்டுமென்று அடம் பிடித்து
மாலியவத்தைகு அருகாமையில்
புது வாழ்வினைத் தொடக்கினாய்
அயலவரையும் அன்பினால் ஈர்த்துக் கொண்டாய்

வீட்டிற்கு வந்த குல விளக்கு நீ
குடிசையினை கோயிலாக்கினாய்
முற்புதரை பூஞ்சோலையாக்கினாய்
என் பெயர் சொல்ல நற் புத்திரரைப்
பெற்றெடுத்துத் தந்தாய்
நம் தோன்றல்கள் நன் நிலைக்கு வரவேண்டும் எனும்
நல்லாசையில் கல்விதனை கற்பிக்க
உன் ஆசைகளை தியாகம் செய்தாய்
காலத்தின் கோலத்தால் கற்க முடியாத நிலை வந்தபோது
வெளிநாட்டிலாவது சிறப்புடன் வாழ வழி சமைத்தாய்.

## மறக்க முடியவில்லை...........

செல்லப் பிள்ளையாக வளர்ந்த நீ
சிறு பிராயத்தினில் எனை மணம் புரிந்து
குடும்பப் பொறுப்புக்களை ஏற்று நம்வாழ்வு உயர்ச்சியடைய
எனக்கு உறுதுணையாய் இருந்ததனை மறக்க முடியவில்லை

செல்வச் சிறப்புடன் திகழ்ந்த போதும்
செருக்கற்று நீ வாழ்ந்த வாழ்வை~ மறக்கமுடியவில்லை
மாற்றானிடம் மண்டியிட மாட்டோம் என்று
மலரவன் பிரசாத் நாட்டிற்கு நம் உதவி வேண்டுமென்றபோது
இன் முகத்தோடு உன் பொருளை ஈர்ந்ததனையும்
மறக்க முடியவில்லை~ என்னால் மறக்க முடியவில்லை.

எதிரினில் காலனவன் கயிறு வீச காத்திருந்ததனை அறிந்தும் நீ
என் கடமைகளை நிறைவேற்ற உன் வேதனைகளைத் தாங்கிக் கொண்டு
உறவுகள் எம்மை வாழவைக்க துடித்ததனையும் மறக்க முடியவில்லை
இறுதியில் திலீபனின் நிலை வந்து விட்டது என கூறியதனையும்
தியாகியின் இறுதி தினத்திலேயே நீ மடிந்ததனையும்
என்னால் மறக்க முடியவில்லை~ தாயே~ என்னால்
மறக்க முடியவில்லை.

**கணவன் அ.சேனாதிராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலை மகனின்
## கண்ணீர்த் திவலைகள்



தாய் வடிவில் வந்த எம் தெய்வமே !
அன்பின் இலக்கணமே !
எங்கே நாம் காண்போம் இனி
உன் போன்ற உறவுதனை
பத்து மாதம் நொந்து சுமந்து
பெற்றெடுத்த எங்கள் தாயே
பதிலுக்கு நாம் என்ன கைமாறு
செய்வோம் என காத்திருந்தோம்
நீர்வேலியில் பட்டப் படிப்பு படித்தாலும்
வைத்தியனாக வரவேண்டும் என ஆசைப்பட்டீர்
காலத்தின் கோலத்தால் அது நிறைவேறாத போது
வெளிநாட்டிற்கு நான் சொல்ல விரும்பியதும்
நோயின் ஆரம்ப நிலையினையும் பொருட்படுத்தாது
எனை இலண்டன் அனுப்பி வைத்து விட்டு
ஏனம்மா நான் உன் முகம் பார்க்க முன்
சொல்லாது சென்றனையோ விண்ணுலகு
உனை எண்ணி உருகுதே என் மனமே
தங்கள் ஆத்மா சாந்தியடைய
தரிசிப்பேன் ஆண்டவனை தினம் தினமே.

**பிரபாகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடை மகனின் கண்ணீர்த் திவலைகள்.



பூப் போன்ற உன் உடலில் ஓர்
பொல்லா நோய் வந்ததோம்மா?
நானிருந்து பார்ப்பதற்கு
விதி வசத்தால் விலகினேனம்மா,
சக பாடிகளுடன் சகஜமாக
சகல இடம் சென்று வந்தாலும்
சத்தம் செய்யாது அன்புடனே அரவணைத்தாய்
கல்வியை கற்பித்தாய் கடையினையும்
அமைத்து தந்தாய்
கனடா சென்று வாழவும் வழி சமைத்தாய்
காலனின் கொடூர பார்வையிலே துடித்த போதும்
நான் விரும்பிய வாழ்வு தனை தமிழ்நாடு வந்து
மனநிறைவுடனே அமைத்துத் தந்தாயம்மா
மீண்டும் நான் பிறந்த மண்ணில் உங்களை
சுதந்திரமாய் பார்க்க முன் எங்கு சென்றனையோ
என் அன்புத்தாயே உனை எண்ணி
உருகுதே என் மனமே
தங்கள் அத்மா சாந்தியடைய
தரிசிப்பேன் ஆண்டவனை தினம் தினமே.

**கருணாகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடை மகனின் கண்ணீர்த் திவலைகள்

அன்பின் உறைவிடமே
பண்பின் சிகரமே
பாசாங்கில்லாத உன் பாசத்தை
எங்கே காண்பேன் ஆசைத்தாயே
குறும்புகள் பல செய்து உங்களுடன்
குலாவி மகிழ்ந்து வாழ்ந்த எனை
பள்ளிக்கு அனுப்பிவைத்தீர்கள்
தண்ணார்ந்த தமிழ் உணர்வைப் பாலோடூட்டித்
தரணியிலே தன் மான வீரத்தோடு
பாருக்கு உதவியதனை மறித்து வைத்தீர்கள்
தந்தைக்கு உறுதுணையாய் இரு
என்று கட்டளையும் தந்தீர்கள்
தங்கள் எண்ணங்கள் நிறைவேற
தினம் தினம் உழைக்கின்றேன்
பாசமாய் வாழ்ந்த எமை பாதியில் மாற்றியதோ
பாழ்பட்ட காலனவன்
எத்தனை முறை பார்த்தாலும் ஆறுதில்லை என் மனம்
எங்கே இனிக் காண்பேன் உன் இன் முகத்தை
என் அன்புத் தாயே உனை எண்ணி உருகுதே என் மனமே
தங்கள் ஆத்மா சாந்தியடைய
தரிசிப்பேன் ஆண்டவனை தினம் தினமே.

**சுதாகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசை மகளின் கண்ணீர்த் திவலைகள்

அண்ணன்கள் மூவரை பெற்றெடுத்த பின்னும்
ஆசைக் கோர் மகள் வேண்டி
ஆண்டவனிடம் மன்றாடி
ஆண்டுகள் எட்டுக் கழிந்த பின்
எனை பெற்றெடுத்தாய் அன்புத் தாயே
சிறப்பாக கல்வி பயில வேண்டும் என்றெண்ணி
சேர்த்தாய் தாயே உடுவில் மகளிர் கல்லூரியில்
நாட்டு நிலை காரணமாக
நான் இங்கே சங்கானை சிவப்பிரகாச
மகாவித்தியாலயத்தில்
நன்றாகத் தொடர்ந்து கல்வி கற்று
தங்கள் இலட்சியக் கனவுகளை
நனவாக்க நான் இங்கே உழைப்பேன் தாயே
அன்புடன் அறிவினை பாலொடுதேனாய்
ஊட்டி வளர்த்து
ஆசை ஆசையாய் அழகு பார்த்து
அறிவுரைகள் பல கூறி
அவனியிலே வாழ வழி அமைத்த தாயே
பாதி வழிதனில் பரிதவிக்க விட்டு விட்டு
காத தூரம் சென்றதேனோ என் அன்புத் தாயே
உனை எண்ணி உருகுதே என் மனமே
தங்கள் ஆத்மா சாந்தியடைய
தரிசிப்பேன் ஆண்டவனைத் தினம் தினமே.

**சுவர்ணகௌரி**

**திவலைகள் ஆக்கம் மகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கணவன் புலம்பல்

அன்புடனே அறுசுவைசேர் உணவு தந்தாய்
அவனியிலே தலைநிமிர்ந்து வாழ வைத்தாய்
உன்னுடனே வாழ்ந்ததனை எண்ணிப் பார்த்தே
உளம் நொந்து துடிக்கின்றேன் ஆற மாட்டேன்
பொன்மனது கொண்டு நீர் பொறுமை காத்தீர்
பூவுலகில் உம் பிரிவைத் தாங்க மாட்டேன்
என்மனது படும்துன்பம் எங்கே சொல்வேன்
இறைவனடி சேர்ந்தீரென் றாற்று கின்றேன்

## மூத்த மகன் புலம்பல்

ஆராத அன்புடன் பாலும் ஊட்டி
அரவணைத்தே அன்புடனே கதைகள் சொல்லி
நேராத கோயிலெல்லாம் நேர்த்தி வைத்து
நிம்மதியாய் யாம்வாழ வழிகள் தந்தீர்
சோராத உளத்தோடு துன்பம் தீர்த்து
சுகம்பலவும் நாம்காணப் பாடுபட்டீர்
தீராத நோயுடலம் கொண்ட தாலே
தேகத்தை நீத்திறைவன் பாதம் சேரந்தீர்.

## 2வது மகனின் புலம்பல்

தண்ணார்ந்த தமிழ் உணர்வைப் பாலோ டூட்டி
தரணியிலே தன்மான வீரத் தோடும்
விண்ணார்ந்த புகழ்தன்னை நாட்ட என்று
விரும்பியெனைக் கனடாவுக் கனுப்பி வைத்தாய்
பண்ணார்ந்த மனைவியோடு நானும்வாழ
பாரதத்தே வந்துனது வாழ்த்துத் தந்தாய்
மண்ணார்ந்த செல்வமெல்லாம் பெற்றுவாழ
மதிப்புடனே எனையாக்கி வந்தீர் அம்மா.

## 3வது மகனின் புலம்பல்

அன்னையே உன்னருகில் இருந்து நானும்
அளவில்லாக் குறும்புகள் செய்த போதும்
அன்புடனே அவற்றையெல்லாம் மகிழ்வாய் ஏற்றாய்
அவனியிலே தந்தையொடு துணையாய் வாழ
அன்புடனே கட்டளைகள் எனக்குத் தந்து
ஏற்றமிகு நல்வழிகள் காட்டி நின்றீர்
என்பெல்லாம் உன்நினைவால் உருகுதய்யோ
எங்கேயுன் திருமுகத்தை காண்பேன் அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் புலம்பல்

அண்ணன்மார் மூவரினைப் பெற்றேன் நானும்
ஆசைக்கோர் மகளாக என்னைப் பெற்றீர்
எண்ணரிய நல்லறிவு பெற்று வாழ
எனைநன்கு படிப்பதற்கு ஆக்கம் தந்தாய்
கண்ணையிமை காப்பதுபோல் என்னைக் காத்தீர்
கலங்குகின்றேன் உம்பிரிவை தாங்காதம்மா
மண்ணுலகில் உம்முகத்தை என்று காண்பேன்
மாறாத துயரத்தால் அழுது சோர்ந்தேன்.

## மருமகள் புலம்பல்

அன்புள்ள மாமியினைப் போல இங்கே
ஆரெனக்கு உதவிடுவார் என்று சொல்லி
துன்பத்தால் கலங்குகின்றேன் என்ன செய்வேன்
தொல்லையினித் தீர்ப்பதற்கு யாரே உள்ளார்
உன் முகத்தைப் பார்ப்பதற்கு ஏங்கி நின்றேன்
உத்தமியே உன்போல மாமி காணேன்
இன்பம்சேர் மகனையுமே எனக்குத் தந்தாய்
இறைவனடி சேர்ந்தனையால் சாந்தி பெற்றாய்



## தந்தை புலம்பல்

தள்ளாடும் வயதினிலே என்னைத் தாங்கி
தாபரித்து உபசரிக்க உன்னைப் போல
கள்ளமிலா மனத்தோடு உதவ வல்லார்
காசினியில் யாரம்மா இங்கே உண்டு
உள்ளமெல்லாம் உன் நினைவால் உருகுதய்யோ
ஓர் நொடியில் காலனவன் கவர்ந்த தேனோ
வெள்ளம்போல் கண்ணீரை சொரிந்து நின்று
விதிவலிமை எண்ணித்தான் ஆறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சகோதரி புலம்பல் (திருமதி நா. ஆச்சிப்பிள்ளை)

பக்கத்தே நானிருந்து மகிழ்ந்து பார்க்க
பாதகனாம் காலனவன் குறுக்கே வந்தான்
துக்கத்தால் என் தொண்டை அடைத்துப் போச்சு
தூக்கியுனை வளர்த்ததெலாம் மறந்து போச்சு
அத்தானோ டிருக்கும்போது குலவவில்லை
அதுவும் விதிதானோ நானறியேன்
எக்காலம் உன்முகத்தைப் பார்க்கப் போறேன்
இதயமது வெடிப்பதுபோல் தோன்றுதய்யோ
முக்காலும் உன்நினைவு நிலைத்து நிற்கும்
முக்கண்ணன் திருவடியை எண்ணிச் சென்றாய்.

## சுற்றத்தார் புலம்பல்.

அன்பாகப் பழகியெமை அரவணைத்தாய்
ஆசையுடன் இனியமொழி பேசி நிற்பாய்
துன்பங்கள் ஏதேனும் வந்த போது
துடிதுடித்து அவைபோக வழிகள் செய்வாய்
இன்பங்கள் தரும்செல்வம் அடைந்த போதும்
எள்ளவும் செருக்கின்றி வாழ்ந்தாய் தாயே
உன்பக்கம் நாமிருந்து உவகை கொள்ள
உத்தமியே காலனவன் விடாது நின்றான்.

## தேற்றம்

பிறந்தவர்கள் எல்லோரும் இறப்பார் என்று
பெரும்புலவர் எல்லோரும் சொல்லி வைத்தார்
கறந்தபால் முலைசேர்தல் எங்கே கண்டோம்
காலன்கை அகப்பட்டு மீண்டார் உண்டோ
அறந்தன்னை நீ செய்து வந்ததாலே
அரனடியில் சாந்தியது பெறுவீர் என்று
சிறந்ததொரு மனத்தாலே தேறுகின்றோம்
தெய்வத்தின் துணையாலே ஆறுகின்றோம்.

*புலம்பல்கள் ஆக்கம் பண்டிதர் ப. இராசகுரு அவர்கள் பண்ணாகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## [illegible]

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திர மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மண்ணுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போ லகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்ன நடை மடைவாளுமைகோ னடியோமுக்
கருள் பரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறைவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழிருக்கவே என்றார்.

## திருப்புகழ்

நீலம் கொள் மேகத்தின் மயில் மீதே
நீவந்த வாழ்வைக் கண்டுஅதனாலே
மால் கொண்ட பேதைக்கு உன் மணம் நாறும்
மார்தங்கு தாரைத்தந்து அருள்வாய்
வேல் கொண்டு வேலைப்பண்டு எறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாள்
நாலந்த வேதத்தின் பொருளோனே
நான் என்று மார்தட்டும் பெருமானே.

## முருகன் விருத்தம்

சோடிழந்த அன்றிலைப் போல் துயரமானேன்
தோகை மயில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானேன்
காடுகளில் இனம் பிரிந்த கலை களானேன்
கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானேன்
ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானேன்
உற்றார் ஒருவரில்லாப் பித்தானானேன்
பாடுபட நானறியேன் பழனி மலைக்கந்தா
பச்சைமயில் வந்து என்னை ரட்சிப்பாயே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர் தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ராகுகால துர்க்கா அஷ்டகம்

(ஹரிவராஸனம் மெட்டில் பாடவும்)

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பாள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மையானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரு மானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் துர்க்கா எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னும் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

துன்ப மற்றவள் துர்க்கா தூரிய வாழ்பவள்
துறைவு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திருசூலி மாயவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெயதுர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ மகாலட்சுமி அர்ச்சனை

1. ஓம் அன்புலெட்சுமி போற்றி
2. ஓம் அன்னலெட்சுமி போற்றி
3. ஓம் அமிர்தலெட்சுமி போற்றி
4. ஓம் அம்சலெட்சுமி போற்றி
5. ஓம் அருள்லெட்சுமி போற்றி
6. ஓம் அஷ்டலெட்சுமி போற்றி
7. ஓம் அழகுலெட்சுமி போற்றி
8. ஓம் ஆனந்தலெட்சுமி போற்றி
9. ஓம் ஆகமலெட்சுமி போற்றி
10. ஓம் ஆதிலெட்சுமி போற்றி
11. ஓம் ஆத்மலெட்சுமி போற்றி
12. ஓம் ஆளும்லெட்சுமி போற்றி
13. ஓம் இஷ்டலெட்சுமி போற்றி
14. ஓம் இதயலெட்சுமி போற்றி
15. ஓம் இன்பலெட்சுமி போற்றி
16. ஓம் ஈகைலெட்சுமி போற்றி
17. ஓம் உலகலெட்சுமி போற்றி
18. ஓம் உத்தமலெட்சுமி போற்றி
19. ஓம் எளியலெட்சுமி போற்றி
20. ஓம் ஏகாந்தலெட்சுமி போற்றி
21. ஓம் ஒளிலெட்சுமி போற்றி
22. ஓம் ஓங்காரலெட்சுமி போற்றி
23. ஓம் கருணைலெட்சுமி போற்றி
24. ஓம் கனகலெட்சுமி போற்றி
25. ஓம் கஜலெட்சுமி போற்றி
26. ஓம் கானலெட்சுமி போற்றி
27. ஓம் கிரகலெட்சுமி போற்றி
28. ஓம் குணலெட்சுமி போற்றி
29. ஓம் குங்குமலெட்சுமி போற்றி
30. ஓம் குடும்பலெட்சுமி போற்றி
31. ஓம் குளிர்லெட்சுமி போற்றி
32. ஓம் கெம்பீரலெட்சுமி போற்றி
33. ஓம் கேசவலெட்சுமி போற்றி
34. ஓம் கோவில்லெட்சுமி போற்றி
35. ஓம் கோவிந்தலெட்சுமி போற்றி
36. ஓம் கோமாதாலெட்சுமி போற்றி
37. ஓம் சர்வலெட்சுமி போற்றி
38. ஓம் சக்திலெட்சுமி போற்றி
39. ஓம் சக்ரலெட்சுமி போற்றி
40. ஓம் சத்தியலெட்சுமி போற்றி
41. ஓம் சங்குலெட்சுமி போற்றி
42. ஓம் சந்தானலெட்சுமி போற்றி
43. ஓம் சந்நிதிலெட்சுமி போற்றி
44. ஓம் சாந்தலெட்சுமி போற்றி
45. ஓம் சிங்காரலெட்சுமி போற்றி
46. ஓம் சீலலெட்சுமி போற்றி
47. ஓம் சீதாலெட்சுமி போற்றி
48. ஓம் சுப்புலெட்சுமி போற்றி
49. ஓம் சுந்தரலெட்சுமி போற்றி
50. ஓம் சூரியலெட்சுமி போற்றி
51. ஓம் செல்வலெட்சுமி போற்றி
52. ஓம் செந்தாமரைலெட்சுமி போற்றி
53. ஓம் சொரணலெட்சுமி போற்றி
54. ஓம் சொர்ருபலெட்சுமி போற்றி
55. ஓம் சௌந்தர்யலெட்சுமி போற்றி
56. ஓம் ஞானலெட்சுமி போற்றி
57. ஓம் கங்கலெட்சுமி போற்றி
58. ஓம் தன்லெட்சுமி போற்றி
59. ஓம் தான்யலெட்சுமி போற்றி
60. ஓம் திரிபுரலெட்சுமி போற்றி
61. ஓம் திருப்புகழ்லெட்சுமி போற்றி
62. ஓம் திலகக்லெட்சுமி போற்றி
63. ஓம் தீபலெட்சுமி போற்றி
64. ஓம் துளசிலெட்சுமி போற்றி
65. ஓம் துர்க்காலெட்சுமி போற்றி
66. ஓம் தூபலெட்சுமி போற்றி
67. ஓம் தெய்வலெட்சுமி போற்றி
68. ஓம் தேவலெட்சுமி போற்றி
69. ஓம் தைரியலெட்சுமி போற்றி
70. ஓம் பங்கயலெட்சுமி போற்றி
71. ஓம் பாக்கியலெட்சுமி போற்றி
72. ஓம் புண்ணியலெட்சுமி போற்றி
73. ஓம் பாற்கல்லெட்சுமி போற்றி
74. ஓம் பொருள்லெட்சுமி போற்றி
75. ஓம் பொன்னியலெட்சுமி போற்றி
76. ஓம் போகலெட்சுமி போற்றி
77. ஓம் மங்களலெட்சுமி போற்றி
78. ஓம் மகாலெட்சுமி போற்றி
79. ஓம் மாதவலெட்சுமி போற்றி
80. ஓம் மாதாலெட்சுமி போற்றி
81. ஓம் மாங்கல்யலெட்சுமி போற்றி
82. ஓம் மாசிலாலெட்சுமி போற்றி
83. ஓம் முக்திலெட்சுமி போற்றி
84. ஓம் முத்துலெட்சுமி போற்றி
85. ஓம் மோகனலெட்சுமி போற்றி
86. ஓம் வரந்தரும்லெட்சுமி போற்றி
87. ஓம் வரலெட்சுமி போற்றி
88. ஓம் வாழும்லெட்சுமி போற்றி
89. ஓம் விளக்குலெட்சுமி போற்றி
90. ஓம் விஜயலெட்சுமி போற்றி
91. ஓம் விஷ்ணுலெட்சுமி போற்றி
92. ஓம் வீட்டுலெட்சுமி போற்றி
93. ஓம் வீரலெட்சுமி போற்றி
94. ஓம் வெற்றிலெட்சுமி போற்றி
95. ஓம் வேங்கடலெட்சுமி போற்றி
96. ஓம் வைரலெட்சுமி போற்றி
97. ஓம் வைகுண்டலெட்சுமி போற்றி
98. ஓம் நாராயணலெட்சுமி போற்றி
99. ஓம் நாகலெட்சுமி போற்றி
100. ஓம் நித்தியலெட்சுமி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலாவல்லி மாலை

ஆயகலைகள் ஆறுபத்து நான் கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பாள் இங்கு வாரா திடர்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குந் தகாது கொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணிந்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம் பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிகை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pandit Sethuraman

(Expert Numerologist, Palmis, Astrologer & Diviner)



ஸ்ரீமான் பண்டிற் ஸேதுராமன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிஷ்ட விஞ்ஞானம்

## ஒன்பதாம் பதிப்பின் முன்னுரை

இந்நூலில் 1969–ம் ஆண்டுக்குப்பின் எந்த விஷயமும் சேர்க்கப்படவில்லை. அவசியம் கருதி சில கருத்துக்களை வாசகர்களுக்கு அளிக்க விரும்புகின்றேன்.

இந்நூற் கருத்துக்களைப் பின்பற்றியபின் வாழ்க்கையில், மகோன்னத நிலையடைந்த ஏராளமான வெளிநாட்டில் வாழும் அன்பர்களும், தொழில் நிறுவனங்களும் அழைத்ததின் பேரில் மும்முறை வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கீழ்த்திசையில் இந்தோனிசியாவிலிருந்து, ஜப்பான் வரை, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய எல்லாத் தேசங்களிலும் அன்பர்கள் மூலம் இந்நூற்கருத்துக்கள் நன்கு பரவியிருந்ததால், எல்லா இடங்களிலும் ஏராளமான வரவேற்பு தானாகவே இருந்தது. இந்த சாஸ்திரத்தின் மகிமையை அறிந்த அந்நாட்டு ரேடியோ, டெலிவிஷன் நிலையங்களும், பிரபலமான எல்லா பத்திரிகைகளும் உற்சாகமாக மிகச் சிறந்த முறையில் முக்கியமான முழுப்பக்கங்களை என் விஜயத்திற்கும், பேட்டிகளுக்கும் அளித்து மிகுந்த அக்கறைகாட்டி கௌரவித் ததற்கு என் ஆழ்ந்த நன்றியை தெரிவிக்க வேண்டியது மிக அவசியம். தமிழ் மொழியே அறியாதவர்களும் இவ்வளவு ஆர்வம் காட்டியது அவர்களது அறிவுப்பசியையே குறிக்கிறது. ஹாங்ஹாங் நகரப் பத்திரிகைகள் ‘குறிப்பிட்டுள்ள விலைக்கு அதிகமாகவே விலை கொடுத்து உலகம் முழுவதும் பல பதிப்புக்கள் விற்பனையான ஒரே புத்தகத்தின் ஆசிரியரின் விஜயம்’ (இந்நூல் காம சம்பந்தப்பட்டதல்ல – எண்களைப்பற்றியது என அறியவும்) என்று தலையங்கம் எழுதி வரவேற்றன.

எண்களைப் பற்றிய விழிப்புணர்ச்சி எல்லா ஊர்களிலும் அதிகரித்துள்ள சூழ்நிலைகள் மூலம் ஆதாயம் தேட பலரும் நோக்கம் போல் யாதொரு ஆராய்ச்சியும் இன்றி புத்தகங்களை வெளியிட்டு, அதிக குழப்பங்களை ஏற்படுத்தி உள்ளனர். கற்றறிந்தோர் செய்யும் தொழில்களுக்கு – டாக்டர் – வக்கீல் போன்று தொழில்களில் முறையே பயின்றவர்கள் எவ்வித விளம்பரமும் சுயமாக செய்து கொள்ளக்கூடாதென்பது உலகெங்கிலுமுள்ள கற்றோர் மரபு. இதனையொட்டியே இதுவரை நான் எனக்கோ அதிர்ஷ்ட விஞ்ஞான நூலுக்கோ எந்த விதமான விளம்பரமும் செய்ததில்லை என்பதை யாவரும் அறிந்ததே. போலி மருத்துவர்கள் விளம்பரம் செய்து ஜனங்களை வஞ்சிப்பது போல் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்து பலர் குழப்பம் விளைவிக்கின்றனர். என் மூலம் முன்னேற்றமும் செல்வமும் அடைந்த சிலர் – சாமியார்கள் உட்பட, தனக்கும் இந்த சாஸ்த்திரம் நன்கு தெரியுமென அநேக பிரமுகர்களுக்கு பெயர் மாற்றம் செய்து விபரீதமான தீய விளைவுக்களை உண்டாக்கிவிட்டனர். வெளிநாடுகளிலும் பலர் நான் அந்நாடுகளுக்கு விஜயம் செய்யாமல் இருந்ததுதான் இதற்கான காரணம் என விளக்கியதில் தான் நான் கொழும்பு, லண்டன், நியூயோர்க் நகரங்களில் அதிக நாட்கள் தங்கும்படியாயிற்று. பல நகரங்களில் என்னிடம் பல வருஷங்கள் சிஷ்யனாக இருந்ததாகச் சொல்லிக்கொண்டு பலர், மனம் போன போக்கில் பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் செய்து கொண்டு சுகமாக வாழ்கின்றனர். என்னுடன் நேரில் தொடர்புள்ள எல்லா அன்பர்களுக்கும் அப்படியான சிஷ்யர்கள் ஒருவருமில்லை என்பது நிச்சயமாகத் தெரியும். இம்மாதிரி நபர்களிடம் ஏமாறாமல் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

**இந்த விளைவுகளுக்கெல்லாம் முக்கிய காரணம் பின்வருமாறு :**

'அதிர்ஷ்ட விஞ்ஞானம்' நூலில் நான் எழுதியுள்ளதுதான் இந்த சாஸ்த்திரம். இதனைப் படித்தவுடன் தமக்கு முழுவதும் தெரிந்துவிட்டது என பலரும் நினைப்பதுதான். இதை முழு நூலாக எழுதி வெளியிட்டால் சுமார் இரண்டாயிரம் பக்கங்களாவது பிடிக்கும். அவ்வளவு விரிவாக வெளியிட்டால் சாதாரண மக்கள் முழுவதும் படித்து பயனடையாமல் விட்டுவிடுவார்கள் எனக் கருதியே, சாதாரணமான தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர் கூட பயனடைய வேண்டுமென நினைத்து , அம்மாதிரி அன்பர்களது வேண்டுகோளின் படி புரியாத வார்த்தைகளே இல்லாத எளிய நூலாக வெளியிடப்பட்டது. பெரும்பாலான, வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள மிக்க செல்வந்தர்களும், தாங்களும் அன்றாட வாழ்க்கையில் பயனடையக் கூடிய வகையில் எழுத வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். (இதை எதற்காக சொல்கிறேனென்றால் நான் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள 41 வருஷ காலத்தில் சுமார் 1500 இற்கு மேற்பட்ட கோடீஸ்வரர்களை சந்தித்திருக்கிறேன். அதில் 5 பேர்கள் தான் ஒரு ஹை ஸ்கூல் படிப்பாவது படித்தவர்கள். நான் குறிப்பிடுபவர்கள் ஸ்திரமான செல்வந்தவர்கள். லாபநட்டங்களால் பாதிக்கப்பட முடியாத நிலையில் உள்ளவர்கள்).

எல்லா பதிப்புகளிலும் நூல் வரலாறு என்கின்ற தலைப்பில் இந்நூல் வெளிவர முக்கிய காரணமாக இருந்த பிரபு (தன் பெயர் வெளியிடுவதை விரும்பவில்லை) என எழுதியுள்ளேன். என் நண்பர்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்தபோதிலும், 8 பதிப்புக்கள் மகத்தான வரவேற்புடன் விற்பனையாகி தமிழ் நாட்டில் மட்டுமே இதன் மூலம் சுமார் 50000 பேர்களுக்கு மேல் மிக்க செல்வந்தர்களான பிறகும், அவருக்கு சேரவேண்டிய புகழையும், இதனால் பயனடைந்தோரின் நன்றி உணர்வையும் அவருக்கு உரித்தாக்குவது என் முக்கிய கடமையாகும்.என்னைப் போல் அவருக்கும் வயதாகி விட்டது. அப்பொழுது எனக்கு வயது இருபத்தொன்பது. அவருக்கு இருபத்துமூன்று வயது. சங்கோஜப்படுவதில் நியாயம் உண்டு. அவருக்குப் பெயர் மாற்றம் செய்து தினமும் நான் சொன்னபடியே கையெழுத்திட்டு வந்தால், பத்து நாட்களில் தீரும் என்று சொன்னபடி (இந்நாட்டின் சிறந்த மருத்துவர்களால் தீராதென கைவிடப்பட்ட நோய்) பூரணமாக குணம் அடைந்ததால் இந்த சாஸ்திரத்தில் நூற்றுக்கு நூறு பூரணமாக கடைப்பிடிக்கும் அபிமானியானார். அன்றிலிருந்து என் சந்தோஷம், சௌக்கியத்தையே தன்னுடையதாக நினைத்து செயல்பட்டவர். எல்லோரும் இந்த சாஸ்த்திரத்தால் பயனடைய வேண்டுமென தீவிரமான நாட்டத்துடன் என்னை இந்நூலை வெளியிடச்செய்தார். என்னை அந்த அளவு தொந்தரவு செய்யாமல் இருந்தால் நான் இன்றுவரையும் வெளியிட்டிருக்கமாட்டேன் என நினைக்கிறேன். (ஏனெனில் என்னை இந்த நூலை ஆங்கிலத்தில் வெளியிட வேண்டுமென்று பல பிரபல ஆங்கிலப் புத்தகம் வெளியிடுவோர்கள் 1951 – ல் இருந்து வேண்டிக்கொண்டும், மயங்கிப் போகுமளவு பணம் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருந்தும் இன்னும் ஆங்கிலத்தில் வெளியிடவில்லை) இதற்கு ஒரே முக்கியமான, நியாயமான காரணம் என்னவெனில் இந்த அறிவை தீயவர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடாதென்ற எண்ணம்தான். இப்பொழுதே எல்லா நாடுகளிலும் தீய சக்திகள் – துஷ்டர்களிடம் சிக்கி நல்லோரும், கற்றோரும், செயலிழந்து நிற்கின்றனர். தொழில் செய்வோர் எல்லா விதமான அதிகாரிகளிடமும் சிக்கித் தவிக்கின்றனர். நியாய தர்ம உணர்வில்லாதவர்கள் பலமடைந்து புராணக்கால அரக்கர்கள் போல நன்கு வாழ்கின்றனர். இந்நிலைமாற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்களும் இந்நூலைப் பின்பற்றி,சிறப்புடன் பயமின்றி, தெளிவுடன் வெற்றியோடு வாழவேண்டுமென்பதே என் அவா.

இந்த மாதிரிக் காரணங்களுக்காக நூலை வெளியிடாவிடின் நல்லவர்களிற்கும் உதவமுடியாமல் போகுமேயென வாதிட்டு இந்நூலை வெளியீடச் செய்தவர் மதுரை டி.வி.எஸ்.நிறுவனத்தின் சேர்மனாக இப்போதுள்ள ஸ்ரீமான் R.RAMACHANDHRAN தான். அவருக்கே தமிழ் நாட்டு வாசகர்களின் நன்றி உரித்தாகுக! இதனைப் பின்பற்றுவதன் மூலம் அவர்கள் எந்தளவு நன்றாக விளக்குகிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

'அதிர்ஷ்ட விஞ்ஞானத்தில்' மேற்கொண்டு விஷயங்கள் சேர்க்காமலும் திருத்தாமலும் இருப்பதன் காரணம் – அம்மாதிரித் திருத்தம் எதுவும் தேவைப்படவில்லை. 1954 – ல் இருந்து இன்றுவரை அந்நூலில் குறிப்பிட்டுள்ள படிதான் ஒவ்வொரு எண்ணின் பலனும் உலகெங்கிலும் நடந்துள்ளன. இந்நூல் உரைகல் போல இருக்க வேண்டுமென நினைத்து எழுதப்பட்டது. அரசியல் போன்ற விவகாரத்துக்குட்பட்ட விஷயங்களில் நான் என்றுமே தலையிடுவதில்லை என்பது யாவருக்கும் நன்கு தெரியும். ஆனால் தனிப்பட்ட முறையில் அரசாங்க மாறுதல்களால் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு என்றும் எதையும் மறைத்ததில்லை. உதாரணமாக கொழும்பு நகரம் தீப்பிடிக்கும், பெரிய ஆலைகள், சொத்துக்களை விற்றுவிட்டு, பையன்களையும் வெளிநாடுகளுக்கு கல்வி கற்க அனுப்பி விடுங்கள் என்று இலங்கை அன்பர்கள் எல்லோரிடமும் 1978 – ம் வருஷமே பலமுறை சொல்லிவந்தேன். 1983 ஏப்ரலுக்குள் சொத்துக்களை விற்றுவிட வேண்டுமென்று. ஆனால் சிலர் மட்டும்தான் மேஜை, நாற்காலிகளைக்கூட வெளியேற்றினர். சிலர் விளையாட்டாக இருந்துவிட்டார்கள். முழு மனதுடன் செயற்படவில்லை. இம்மாதிரியான விஷயங்கள் தனிப்பட்ட முறையில் தான் சொல்லலாம். பகிரங்கப்படுத்தினால் தீமைகளே அதிகமாகும்.

26 – ம் தேதியைப் பற்றி யாவரும் பயப்படும்படி எழுத நேர்ந்தது. உண்மையை மறைக்கலாகாதெனக் கருதி, ஓர் உதாரணம் போதுமானது. இப்பொழுது இங்கிலாந்து அரசியாக உள்ள எலிஸபெத் மஹாராணியாரின் தாயார் மேரி ராணியார் 26 – ம் தேதி பிறந்தவர். அவர் ஆறாம் ஜார்ஜ் மன்னரின் பட்டத்தரசியாக சிம்மாஸனம் ஏறும் போது அதற்குப் பெயர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். சூரியன் அஸ்தமிக்காத ராஜ்யமாக உலகெங்கும் பரவியிருந்தது. 1951 – ல் ஜார்ஜ் மன்னர் இறந்து மேரி ராணியார் சிங்காசனத்தை விட்டு இறங்கும்போது உலக சாம்ராஜ்யத்தை இங்கிலாந்து முழுவதுமாக இழந்து இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்துதான் மிச்சம். (இப்படியிருக்க சில இளையர்கள் 26 – ம் தேதி பிறந்துள்ள பெண்ணையே காதலிக்கின்றேன் திருமணம் செய்து கொள்ளலாமா எனக் கேட்கும்போது – சாம்ராஜ்யங்களுக்கே இந்த கதி.யோசித்து செய் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.) இதனால் ஒருவரும் மனம் தளரவேண்டாமென்பதே இந்நூற் கருத்து. அன்பர்களது பெண்பிள்ளைகள் இம்மாதிரி தேதிகளில் பிறந்தவர்களுக்கும் நான் தகுந்தபடி விவாகம் செய்யச் சொல்லி, தீமையே நிகழாதெனும்படியான நாட்களில் விவாகம் அமைத்துக் கொடுத்து, இன்றுவரை நன்றாகவே செல்வச்செழிப்புடன் வாழ்கின்றனர். தீமை நம்மை பாதிக்காமல் இருக்கும் வழியை உணர்த்துவதே இந்நூல். பல ஜோதிட வல்லுநர்கள் என்னிடம் இந்த சாஸ்த்திரம் நன்றாக பலன் தருகிறது. ஆனால் நூல்களில் நவக்கிரஹங்கள் பூரண வலிமையுடையவை. அவைகளின் ஆதிக்கத்திலிருந்து ஸ்ரீ பரமேஸ்வரன் கூடத் தப்பியதில்லை என்று சொல்கிறார்களே எனக் கேட்பதுண்டு. அதற்கு நான் வழக்கமாகக் கூறும் பதில் இதுதான் எல்லா கிரகங்களும் அவரவர் இயல்பின்படி இயங்குகின்றனர்.

இதில் நடுநாயகமாகக் கூறப்படும் "சூரியன்" தான் நமக்கு சுலபமாக கண்ணுக்கு தினம்தோறும் தெரிந்த தன் கிரணங்களால் வெளிச்சத்தையும், உயிர் சக்தியையும் அளிக்கிறவர். நம்மை பாதிக்கும்படி சித்திரை, வைகாசி மாதங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியை அதிக சூடு பண்ணுகிறவர். இம்மாதங்களில் நாம் வீட்டைவிட்டு வெளியேறி ஒரு இடத்திற்குப் போக வேண்டுமானால் (இந்த அனுபவம் சிந்து, ராஜஸ்தான் போன்ற பிரதேசங்களில் – பாலைவனங்கள் – வாழ்பவர்களது பெரிய பிரச்சனை) தலை சுற்றும், கால் சுடும், போகமுடியாது. பிராணாபத்தும் விளையும். ஆனால் காலில் செருப்பும் தலையில் குல்லாயும், கையில் குடையும் எடுத்துப் போனால் வெகுவான பாதிப்பின்றி போய்விடலாம். காரிலோ, பஸ்ஸிலோ போனால் தலை,கால் பாதிக்காது. ஏர்கண்டிஷன் காரில் போனால் வெய்யில் விஷயமே நாம் உணராமல்ப் போய்விடலாம். இம்மாதிரி சூரிய வெப்பத்திலிருந்து தப்பிப் போவதை சூரியன் ஒருநாளும் தடை செய்யமாட்டார். ஆகாய முழுவதும் பந்தல் போட நம்மாலும் முடியாது.நம்மைக் காப்பாற்றிக் கொண்டால் போதுமென நினைத்தே ஆவன செய்யவேண்டும். இதனால் நாம் சூரியனின் வெப்பத்தையும் தணிக்கவில்லை. இந்த முறையில்தான் கிரகங்களின் தீய சக்திகளிலிருந்து தனி மனிதர்களோ, வியாபார ஸ்தலங்களோ, தன்னை பாதிக்காதபடியான எண்களை பெயரில் கொண்டு தப்பிப்பது, நன்மையடைவது. (விதி கால் சுட்டுத்தான் தீரும் என்பதை முயற்சியில் நம்பிக்கையில்லாத வாதம்). வெயில், சூடு இவைகள் தான் விதி. மாட்டிக்கொள்வதும் தப்பிப்பதும் நம் பிரயத்தனத்தையும் புத்திசாலித்தனத்தையும் பொறுத்ததே.

நான் முதல்முறையாக 1969 – ல் சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கு விஜயம் செய்து ஆறு மாதங்கள் கழித்தே திரும்பினேன். அதன் காரணம் அந்நாடுகளில் இருந்து என்னைப் பார்க்க வரும் பெரிய வியாபாரிகளும், கடை சிப்பந்திகளும் கூட குடும்பத்தைப் பிரிந்தே வாழ்பவர்கள். பலர் இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறைதான் இந்தியாவுக்கு வந்து மனைவி மக்களுடன் ஏதோ ஒரு மாதம் இருந்து விட்டு மலேசியா, சிங்கப்பூர் திரும்பி விடுவார்கள்.

முஸ்லிம் சகோதரர்கள் பலர் 7 அல்லது 8 வருடங்கள் கூட குடும்பத்தை பிரிந்தே வாழ்ந்து வந்தனர். ஒருமுறை வந்து போகும் சிலவின் பாதிப்பு இரண்டு வருடங்களுக்கு அவர்களை வாட்டும். இவர்கள் எல்லோருமே பிறந்த தேதியோ, கூட்டு எண்ணோ நெ.7 ஆக உள்ளவர்கள் தான் இந்தக் கஷ்டத்தை நாங்கள் நேரில் வந்து உங்கள் மூலம் தீர்த்துக் கொண்டோம். ஆனால் வசதி குறைவான ஏராளமானவர்கள் நேரில் வந்து உங்களை சந்திக்க முடியாது. ஆதலால் உங்கள் வாழ் நாளில் சில மாதங்ளை அவர்களுக்காக ஒதுக்கி ஒருமுறை அங்கு வரலாகாதா என்று கேட்டவண்ணமிருந்தனர். அங்கு சென்ற தினமே எனக்காக மிகப் பெரிய வரவேற்பளித்த 'தமிழ் முரசு' பத்திரிகையின் முதலாளி ஆசிரியராகத் திகழ்ந்த ஸ்ரீமான் சாரங்கபாணி மாலையில் ஒரு சொற்பொழிவு ஏற்பாடு செய்து, வருபர்கள் பிறந்ததேதியை குறித்துக் கொண்டு வரவேண்டுமென பெரிதாக பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். அவர் முன்னுரையில் என்னைப் பற்றி சிலாகித்து 'இந்த ஆசிரியர் மற்றவர் போல் பணம் சம்பாதிப்பதற்காக இங்கு வரவில்லை. மனைவி மக்களைப் பிரிந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களது, வாழ்க்கையை வளம்பெறச் செய்யவே வந்துள்ளார் எனக் கூறினார். இதற்கெல்லாம் காரணம் 7 எண்தான் என்று கூறி கூட்டத்தில் எத்தனை பேர் 7 எண் இல்லாதவராவார்கள் என்று கேட்டேன். ஒருவரும் கைதூக்கவில்லை. எல்லோருமே தேதி குறித்து வந்திருப்பதாக கூறினர். ஸ்ரீமான் சாரங்கபாணி தானும் சிறுவயதில் திருவாரூரில் இருந்து வந்ததாகவும், இன்னும் ஒரு முறைகூட இந்தியா திரும்பவில்லை என்றார். அநேகர் 10 வருடங்கள், 20 வருடங்களாயின மனைவி மக்களைப் பிரிந்து என்றனர். விவாகம் முடிந்து 4 நாட்கள்கூட இல்லாமல் இங்கு வந்து ஏழு வருஷங்களாகின்றன. என்பது போன்ற சோகக் கதைகள் எத்தனையோ, அம்முறை நான் பெயர் மாற்றம் செய்த எல்லா அன்பர்களும் செல்வப்பெருக்குடனும், மனைவி மக்களுடனும் சேர்ந்தே வாழ்கின்றனர்.(மலேஷியா நாட்டில் எல்லோரும் இந்தக் கலையை உணர மிக்க பிரசித்தி கொடுத்த 'தமிழ் நேசன்' பத்திரிகைக்கும் தமிழ் முரசு, எக்கோ பத்திரிகைகளுக்கும் என் நன்றி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று கடைகளில் சிப்பந்திகளாக இருந்த அநேகர் இன்று சீமான்களாக வாழ்கின்றனர். அச்சமயம் ஜப்பானில் இருந்து நைலக்ஸ் சேலைகள் இறக்குமதி செய்து விற்ற குஜராத்தி வியாபாரி – நான் விஜயம் செய்த அடையாளமாக தனக்கு ஏதாவது பெரிதாக செய்ய வேண்டுமென்றார். அதற்கிணங்கி அவர் வரவ ளைத்து விற்கும் துணிகளுக்கு நைலக்ஸ் க்ரேப் 644 எனப் போடச் சொன்னேன். பெண்மணிகளுக்கு தெரியும் இந்த 644. இதுவே நான் முதலாக நம்பரை துணி வியாபாரத்தில் புகுத்தியது. அவரும் பல கோடி டாலர்களை இதன் மூலம் அடைந்தார். தென் இலங்கையிலிருந்து ஜப்பான் வரை துணி வியாபாரத்தில் சிறந்து விளங்கும் விலாசங்களெல்லாம் நான் பெயர் அமைத்துக் கொடுத்தவைதான் என்பது வியாபார வட்டாரங்களில் யாவரும் அறிந்ததே. தோல்வியே அறியாமல் மக்களுக்கு பெருத்த நன்மைகளையே இக்கலை கடந்த 41 வருஷங்களாக அளித்து வந்திருக்கிறதென்பதை எல்லோரும் அறிந்து தைரியத்துடன், சிறிதும் தயங்காமல் பின்பற்றலாம் என்பதை உணர்த்தவே இவ்வளவு எழுதுவது. பல ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்யும் ஸ்தாபனங்களிலும், இதைப் பின்பற்றுவதால், வேலை நிறுத்தம், விபத்து இவைகள் இதுகாறும் நிகழ்ந்ததில்லை என்பதை வாசகர்கள் அறிவர். என்னிடம் வருபவர்களை தராதரம் தெரியாமல் நான் வேகமாக பணக்காரன் ஆக்குகிறேன் என்பது பல பெரிய மனிதர்கள் என்னைப் பற்றிக் கூறும் குற்றச் சாட்டு. நான் 20 – ஆம் வயதில் இராணுவத்தில் வகித்த பெரிய பதவியை விட்டுவிட்டு இந்த சாஸ்த்திரத்தை ஜனங்களுக்கு நன்மை செய்ய உபயோகிக்க வேண்டுமென்று தொழிலாக ஏற்றுக் கொண்டேன். இந்த சாஸ்திரம் வேகமாக பரவ வேண்டுமானால், நான் பெயர் மாற்றி அமைப்பாளர்கள் வெகு சீக்கிரம் மேலான பலன்களை அடைந்தால்தான் உலகம் ஒப்புக்கொள்ளும் என்கிற வேகத்தில் எல்லோரையும் பெரிய பதவிகளை அடையும்படி மாற்றி வைத்தேன். உடனே பலன்களும் கிடைத்தன. செல்வ நிலையில் முன்னேற்றம் அடைந்தால் தான் ஒருவனை அவன் குடும்பத்தார்கள் கூட மதிக்கிறார்கள். மற்ற முன்னேற்றங்களை ஒருவரும் புரிந்து கொள்வதில்லை. மெத்தப்படித்தவர்கள் கூட பெயர் மாற்றினால் உடனே அதிர்ஷ்ட மடிக்கும் என்ற கூற்றை (என் தகப்பனார்கூட முழுவதும் நம்பவில்லை. தனக்கு நோய் – ஆபரேசன் செய்ய வேண்டு என கூறப்பட்டது, சில நாட்கள் கையெழுத்திட்டதும் பூரணமாக குணமடைந்த பின்னரே, நான் யோக்யன்தான் என்று பூரணமாக நம்பினார்) சுலபமாக நம்பவில்லை. புதுக்கோட்டையில் நோயுற்றிருந்த ஒரு வக்கீல் பெயரை 42 எண்ணிலிருந்து 46 – க்கு மாற்றி ஒரு மாதத்தில் ஜட்ஜ் ஆவார் என்று சொன்னதை அனேக வக்கீல்கள் பரிகாசமாகவே பேசி வந்தனர். எதிர்பாராத ஒரு நெருக்கடியால் நான் சொன்னபடியே, யாரும் எதிர்பாராதபடி அவர் விசேஷ ஜட்ஜ் ஆக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு யாரும் இதை நகைப்பிற்குரிய விடயமாக கருதவில்லை.

செட்டிநாட்டின் எல்லா பிரமுகர்களும் அன்றே பூரணமாக ஒத்துக் கொண்டார்கள். 1951 – ல் இலங்கைக்கு வரும்படி என் அன்பர்களான (என்னால் பதவி உயர்வடைந்த) சில ஜட்ஜ்கள் அழைப்பிற்கிணங்கி சென்றேன். கொழும்பில் நான் அச்சமயம் உள்துறை மந்திரியின் செக்ரட்டரியாக இருந்த ஸ்ரீமான் வைரமுத்துவின் வீட்டில் தங்கி இருந்தேன். அவர் என்னை ஜட்கள் அழைப்பித்ததன் நோக்கம் அப்பொழுது 3 – ஆம் ஸ்தானத்தில் இருந்து ஜஸ்டிஸ் நாகலிங்கம், பிரதம ஜஜ்டிஸ் ஆக முடியுமா என்பதற்காகத்தான் என்னை அழைத்துள்ளார். அவர் ஒருக்காலும் அப்பதவியை அடைய முடியாது அவருக்கு மேல் உள்ளவர்கள் 5 வருஷம் 7 வருஷம் பதவிக்காலம் உள்ளவர்கள். இவருக்கு 41/2 ஆண்டுகளே பதவிக்காலம். இது சாதாரண விஷயமல்ல. அவர் கேட்டால் வரம் கொடுப்பது போல் எதையாவது சொல்லி மாட்டிக் கொள்ளாதீர்கள் என திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டி ருந்தார். என்னைக் கேட்டால் என்னால் முடிந்ததை செய்வேன் என்று சொன்னேன். அதே போல் ஜஜ்டிஸ் நாகலிங்கம் அவர்களும் ‘எனக்கு இதைச் செய்தால் ஒரு தமிழ் மகன் இந்தப் பதவியை வகித்த பெருமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் இனத்திற்கே உண்டாகுமென்றார். அவரை சில நாட்கள் லீவு எடுத்துவிட்டு குறிப்பிட்ட தேதியில் பதவியில் சேர்ந்தால் சீக்கிரமே இலங்கையில் பெரிய பதவியை அடைவீர் என எழுதிக் கொடுத்தேன். ஒரே மாதத்தில் பிரதம நீதிபதி காமன்வெல்த் நீதிபதிகள் மகாநாட்டிற்காக ஆஸ்திரேலியா போக, அதற்கிடையில் இரண்டாவது பதவியிலிருந்தவர் வயிறு ஆபரேஷன் செய்து ஆஸ்பத்திரியில் இருக்க ஸ்ரீமான் நாகலிங்கம் பிரதம நீதிபதியாக செயல்ப்பட்டார். கவர்னர் ஜெனரல் லண்டனில் இருந்து அவசரமாக அழைக்கப்பட்டதால் நம்மவர் கவர்னர் ஜெனரலாக இருமுறை ஆனார்.

பார்லிமெண்ட், மேல் சபை மெம்பர்கள் சங்கத்தில் நான் சொற்பொழிவாற்றிய போது அடுத்துவரும் பிரதம மந்திரிகளும் நாயக்கா என்ற பெயருடயவர்களாக இருப்பார்கள் என்றேன். இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்த 'தஹ நாயக்கா' – என்பவர் எழுந்து பண்டிட் அவர்களே என் பெயரும் தஹ நாயக்காதான். என்னையும் அருள்பாலியும் என்றார். எல்லோரும் கைகொட்டி சிரித்தனர் (ஏனெனில் அவர் ஒரு சுயேட்சை தன் ஓட்டு ஒன்றுதான் உள்ளவர்) நான் 'நீரும் சிறிது காலம் இலங்கையின் பிரதம மந்திரியாக இருப்பீர்' என்றேன். எல்லோரும் இதை தமாஷ் என்றுதான் நினைத்தனர். கூட்டம் முடிந்ததும் இப்பொழுது மந்திரியாக உள்ள தொண்டமான் அவர்கள் என்னிடம் வருத்தப்பட்டார். 'சிறுபிள்ளைத் தனமாக நீர் இப்படிச் சொல்லலாமா? எனக்குக் கூட இந்திய காங்கிரஸ் ஓட்டு கிடைக்கும் – ஜனநாயகத்தில் சுயேட்சை எப்படி ஐயா பிரதமராக முடியும்' என்று சொன்னார். அதற்கு நான் 'தொண்டமான் அவர்களே நான் சொன்னபடி அவர் நிச்சயம் பிரதமராவார். இன்றிலிருந்து அவரை சிநேகிதனாக்கிக் கொள்ளும் என்றேன்.

ஸ்ரீமான்பண்டார நாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டதும், கட்சிச் சார்பில்லாத ஒருவரையே விசாரணை முடியும் வரை நியமிக்க வேண்டுமென நினைத்து பிரிட்டிஷ் ராஜாங்கம் 'ஸ்ரீமான் தஹ நாயக்காவை' பிரதமமந்திரியாக்கியது. டைம்ஸ் பத்திரிகை முதல் பக்கத்தில் இந்தியாவில் இருந்து வந்துபோன பண்டிட் அவர்களைத் தவிர இலங்கையில் எவரும் ஸ்ரீ தஹநாயக்கா பிரதமராவார் எனக் கனவிலும் நினைக்கவில்லை' என்று எழுதியது. அவரும் நான் சிறிது காலம் என்று சொன்னபடி ஆறுமாதகாலம் பிரதமராக இருந்தார். 1979 – ல் இலங்கை சென்றபோது ஸ்ரீமான் தொண்டமான் அவர்கள் வீட்டிற்கு, எனக்களித்த விருந்துக்கு சென்றபோது தன் புதல்வரிடம் 'நீ எல்லாம் சிறுபிள்ளை 1951 – ல் 'தஹநாயக்காவை பிரதம மந்திரி ஆவீர் என்று சொன்னவர் இவர்தான்' என்று அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சி அவர் மனதில் அவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளது போலும், ஏனெனில் ஸ்ரீமான் தஹ நாயக்கா என்னிடம் நம்பர்களைப் பற்றி விவாதித்த போதும் 'இதைல்லாம் ஒன்றும் உமக்கு நடக்காது ' என்றவர் அவர்.

கிறிஸ்தவ சகாப்தம் தொடங்கியதிலிருந்து இந்த 1954 வருஷங்கள் வரை உலகில் நடந்துள்ள போர்கள், அரசாட்சிகளின் ஏற்றம், வீழ்ச்சி, உலக சம்பவங்கள் இவையெல்லாம் சரியாகத்தான் நடந்திருக்கிறதா என்பதைக் கவனித்து அதன் பின் பூரண மனத் திருப்தியுடன் வெளியிட்ட நூல் 'அதிர்ஷ்ட விஞ்ஞானம்'.

'கண்ணீரால், வியர்வையால் வளர்ந்தோம் இப்பயிரை ரத்தம் சிந்திப் பெற்றோம் இந்த சுதந்திரத்தை' என்று பல நாடுகளிலும் கூறுகிறார்கள். அதுபோல் அந்த ஆராய்ச்சியே என் வாழ்வின் குறிக்கோளாக கொண்டு தினமும் 3 மணிநேரமே தூங்கி 1942 முதல் இன்று வரை நான் வளர்த்த பயிர் இந்தக்கலை. இதை மற்றவர்கள் மாசுபடுத்தவோ ஜனங்களைக் குழப்பவோ செய்தால் பின்வரும் சந்ததிகள் குழப்பமடைவார். இதை வாசகர்கள் உணர்ந்தால் நலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலில் கூறியுள்ள பலன்கள் எல்லா தேசங்களுக்கும், எல்லாக் காலங்களிலும் பொருந்தும். உலகிலேயே மிகப் பெரிய அந்தஸ்தை அளிக்க வல்லதாக 46 எண்ணைக் குறித்துள்ளேன். இந்தோனேஷிய தலைநகரான ஜகார்த்தாவில் மிகச்சிறந்த அமெரிக்க பள்ளிக்கூடத்தில் (பையன்கள் செலுத்தும் வருஷ சம்பளம் சுமார் 30 ஆயிரம் ரூபாய் வாத்தியார்கள் சம்பளம் 50 ஆயிரதடதிற்கு மேல் மாத சம்பளம்) அங்கு இந்த சாஸ்திரத்தைப் பற்றி பேச அழைக்கப்பட்டேன். அப்பொழுது உலகிலேயே மிக்க மேன்மையான நிலையெய்தியவர்களின் எண் 46 என்று சொல்லி அவர்கள் புரிந்து கொள்ளும் உதாரணங்களாக Joseph Sttalim, Albert Einstein Charlie, Chaplin என்று யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய பெயர்களை கரும்பலகையில் எழுதிவிட்டு இவர்களையெல்லாம் விட புகழ்மிக்க, இன்னும் ஆயிரம் வருஷங்களுக்குப் பின்னும் எல்லா நாடுகளிலும் பள்ளிக்கூடப் புஸ்தகங்களில் வரக்கூடியது யாருடைய பெயர்? அவர் தற்சமயம் நம்காலத்தில் வாழ்ந்துவரும் ஆண் மகன் என்று கேட்டதற்கு சில நிமிஷங்களுக்கு சரியான பதில் வரவில்லை. பிறகு நான் Nail J.Armstrong 46 எண்ணுடைய அமெரிக்கர். முதல் முதலில் சந்திரனில் இறங்கிய மனிதர் யார் என்று கேள்வி என்றும் பள்ளிக்கூடபுஸ்தகத்தில் இடம்பெறும் என்று பலத்த கரவொலிக்கிடையே முடித்தேன். ஆனாலும் 46 எண் எல்லோரும் வைத்துக் கொண்டால் இம்மாதிரி பலன் வராது. அது பொருந்த வேண்டும். 9 எண்காரருக்கும் 46 இருதயநோயை உண்டு பண்ணும்.

37 மிகச்சிறந்த போக போக்யங்களைத் தரவல்லது அநேக மதன காமராஜன்களை இந்த எண்ணில் காணலாம். ஆனாலும் இது 9, 18, 27 பிறந்தவர்களை உஷ்ணத்தை கண்களிலேயே தேக்கி குருடாக்கிவிடும். 9,27 தேதிகளில் பிறந்தவர்களுக்கு 45 எண்ணுடைய பெயர் நன்மையே தரும். ஆனால் 18-ந் தேதி பிறந்தவர்களுக்கு 44,45 இந்த எண்கள் குஷ்டரோகத்தை உண்டுபண்ணும்.(கொடூரமும், அதிக திமிரும் ஏற்பட்டு ரத்தம் முறிவதால் தான் குஷ்டரோகம் உண்டாகின்றது.) அதிக குடிப்பழக்கத்தால் குடல் வெடித்து இறந்தவர்கள் வெகுசிலரையே நான் அறிவேன். சுமார் 30 வருஷங்களுக்கு முன்பே, இவர் நிச்சயம் வயிறு வெடித்து மாண்டு போவார், எனக் கூறப்பட்டவர்கள் இன்றும் நன்கு உயிருடன் இருக்கின்றனர். ஆனால் அசூயை, பொறாமை நிறைந்த பலர் பித்தப்பை வெடித்து இரத்தம் கக்கி மாண்டிருக்கின்றனர். பொறாமை வயிறு வெடித்துப்போகிறான். வயிற்றெரிச்சல் தாங்கவில்லை முதலியவை முற்றிலும் உண்மையே. எல்லா பெரிய தொழில் அதிபர்களும் தனக்கு நீரழிவோ, இருதயக்கோளாறோ வந்தது ஸ்ட்ரைக் நடந்தபோது, கலவரம் ஏற்பட்டபோது என்று தான் சொல்கிறார்கள். பெரும்பாலான பெரிய வியாதிகளுக்கெல்லாம் மனஉளைச்சல், உணர்ச்சிகளின் பாதிப்புத்தான் காரணமாக உள்ளது. பொதுவாக 6 எண்ணில் பிறந்தவர்களுக்கு 6 எண் நாட்கள் மிக்க அதிர்ஷ்டமானவை. ஆனால் 6 எண் நாளில் கண் சிகிச்சை ஏதாவது செய்தால் நிச்சயம் ஒரு கண்ணாவது போய்விடும். காரணம், 6 எண் குறிக்கும் சுக்கிரன் 'ஒற்றைக்கண்ணன்' என்பது தான். இந்த மாதிரி சிகிச்சை முதலியவைகளுக்கு பொதுவிதிகள் போதுமானவை அல்ல. தத்துவதரிசனம், ஆழ்ந்த சோதிட ஞானமும் இருந்தாலன்றி, விபரீதங்கள் நிகழக்கூடும். 2 எண் சந்திரனைக் குறிக்கும். நீர் அதிகரிக்கும் காய்கறிகள் பயிர் செய்தால் அதிக நீரை உட்கொண்டு கத்திரிக்காய் கூட தேங்காய் பருமன் வரும். ஆனால் 2 எண் நாளில் ஆபரேஷன் செய்து கொண்டால் சீழும், ஜலமும் வெகுநாட்கள் வந்து கொண்டே இருக்கும். சுலபத்தில் ஆறாது. கண் சிகிச்சை 9 எண்காரர்களைத் தவிர மற்றெல்லோரும் 1 எண் நாட்களில் செய்து கொள்ளலாம். 9 எண்காரர்கள் 9,5 நாட்களில் செய்ய நலம். 9 எண்ணுடையவர் 2 எண் நாளில் சிகிச்சை செய்தால் ஜலம் வடிந்து கொண்டே இருந்து கண் அழுகிவிடும். நான் 2-10-1985 அன்று காடராக்ட் (பூவிழுதல்) ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் கெட்டிக்காரனாலும் நீரைக்கக்கியே கண் போய்விடும் எனக் கூறியும் தைரியமாக அத்தேதியில் சிகிச்சை செய்துகொண்டு கண்ணை இழந்தார் என் நண்பரின் கூட்டாளி. கண்ணைப் பிடுங்கி விட்டு அழகான பொய்க்கண்ணை பொருந்திக் கொண்டுள்ளார் இதுபோல 3 எண்ணுக்கு 6 நாட்கள் 6 – க்கு 3 நாட்கள்; 7 – க்கு 7,8 நாட்கள். 1,2,4,7,8 எண்காரர்கள் எல்லோருக்கும் 8 வரும் நாட்கள் தீமையே விளைவிக்கும். சரீரத்திலுள்ள அங்கங்கள் எந்த எண் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை என்று அறிந்து அதற்கேற்றபடி செயல்படவேண்டும்.

பலவகையான வலிப்பு நோய்கள் பிறந்ததிகதி 6,15,24 ஆக இல்லாவிடில் பெயரை 41 எண்ணுடையதாக்கி எழுதி வந்தால் நோய் அறவே நீங்கும். 6,15,24 தேதியோ அல்லது கூட்டுஎண் 6 ஆகவோ இருந்தால் 42 வைக்கலாம். நன்மையே தரும். இந்நோய் அஜீரணத்தால் அதிகரிக்குமாதலால் 33 போன்ற ஜீரண சக்தியைக் குறைக்கும் எண்ணுக்கு மாற்றக்கூடாது.

பார்க்கின்ஸன் வியாதி என்ற வைத்தியம் வெற்றியளிக்காத நோய் தொடர்ந்த மலச்சிக்கலால், குடல் இயக்கம் கெட்டு நரம்பு முனைகளுக்கு இரத்த ஓட்டம் ஏற்படாததால், (கைகள், கால்கள் உதறும்)இந்த நோயை 5 எண் குணப்படுத்தாது. 1 அல்லது 9 – ல் எது பிறந்த எண்ணுக்கு சாதகமானதோ அதை அமைக்க குணமாகும்.

ஆஸ்துமா என்று தற்காலத்தில் எல்லாவிதமான மூச்சுத்திணறல், இழுப்புக்களையும் வர்ணிக்கிறார்கள்.இதில் நூற்றுக்கு 4 சதவீதம் கூட நிஜமான ஆஸ்துமா அல்ல. கைவிரல்களில் முதல் அங்குலாஸ்தியில் (நகம் உள்ள பாகம்) கட்டமிட்டது போல் குறுக்கு நெடுக்காக கோடுகள் இருந்தால் தான் ஓரியினல் ஆஸ்துமா. மற்றையவை சூழ்நிலை, தறிகள் நெய்யுமிடத்து வாழ்தல், பஞ்சு, சிமெண்ட் மற்ற காற்றின் அசுத்தத்தால் உண்டாணவையே.

இம்மாதிரி கூறிக்கொண்டே போனால் நான் சொன்ன இரண்டாயிரம் பக்க நூலாகிவிடும்.

எதற்கு இவ்வளவு தூரம் சொன்னேன் என்றால் "அதிர்ஷ்ட விஞ்ஞானம்" படித்ததுமே முழு சாஸ்திரமும் தெரிந்ததாக பலர் நினைத்திருப்பதை பெருந்தவறு என்று உணர்த்தவே.

என்னை நேரில் சந்திக்க முடியாதவர்களும் அவர்கள் வீட்டிலுள்ளவர்கள் யாருடைய பெயராக இருந்தாலும் 16,17,26,29,31,35,38,44,47 என்பதுபோல் தீமை தருவனவாக இருந்தால் பிறந்த தேதிக்கேற்ற, புத்தகத்தில் நன்மையானது என அறிவிக்கப்பட்டுள்ள எதற்காவது மாற்றிக்கொள்ளலாம். நீங்கள் என்ன தப்பாக மாற்றினாலும் இதைவிட தீமை விளையாது, ஓரளவாவது நன்மையே உண்டாகும். இதில் 38 திடீர் மரணத்தை விளைவிக்கக்கூடியது. 16 எண்ணில் புத்திர சோகத்தையும் 47 எண்ணால் கண் குருடாவதையும் நிகழாமல் தடுத்துக் கொள்ளவும்.

<u>புத்திரப்பேறு</u>

இக்கலையின் மூலம் சந்தானபாக்யமில்லாத ஆயிரக்கணக்கான தம்பதிகள் யோகமான நல்ல சந்ததிகளை அடைந்துள்ளனர். தலைசிறந்த மருத்துவ வல்லுனர்களால் கர்ப்பப்பை வளர்ச்சியே இல்லை. சிகிச்சை பயன்தராது என பலராலும் கைவிடப்பட்டவர்களும் பெயர் மாற்றியபின் பல குழந்தைகளைப் பெற்றுள்ளனர்.

பஞ்சாங்கம் நான் முதற் பதிப்பில் குறிப்பிட்டதைவிட தற்சமயம் பஞ்சாங்க விஷயம் ரொம்பவும் மோசமாகி விட்டது. பஞ்சாங்கம் அதிகமாக புரோகிதர்கள் முதலியவர்களால் வாங்கப்பட வேண்டுமென நினைத்து ஒவ்வொரு பஞ்சாங்கமும் வருஷத்தில் 80 – க்கு மேற்பட்ட முகூர்த்தங்களை வெளியிட்டு இருக்கின்றன. மார்கழி, புரட்டாசி,ஆடி மாதங்களிலும் நிறைய முகூர்தங்களை வெளியிடுகின்றனர் சமீபத்தில் ஒரு பிரசித்த பஞ்சாங்கம் வெளியிடுபவரின் நெருங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர் என்னைக் காணவந்திருந்தார். என்னப்பா உங்கள் பஞ்சாங்கத்தில் ஏராளமான முகூர்த்தம் போட்டுள்ளீர்களே அது ஞாயமா எனக் கேட்டதற்கு, அவர் நாங்கள் ஏஜெண்டுகளுக்கு நான்கு ரூபாய்களுக்கு பஞ்சாங்கம் விநியோகிக்கிறோம். வியாபாரத்திற்காக அதிக முகூர்த்தம் வெளியிடுகிறோம். ரூபாய்க்கு ௨௨ முகூர்த்தம் போல் இருப்பதை ஏன் கல்யாணம் செய்பவர்கள் பின்பற்ற வேண்டும்? கல்யாண மண்டபங்களுக்கு ஆயிரக்கணக்கில் செலவழிப்பவர்கள் ஏன் நல்ல சோதிடரிடம் நாள் அமைத்துக் கொள்ளக் கூடாது. ஏன் 4 காசில் முகூர்த்தம் எதிர்பார்க்கிறார்கள் என்று ஒரு போடு போட்டார். ஏதோ ஜனங்கள் மலிவு விலையில் முகூர்த்தம் கேட்டது போல், எண் சாஸ்திரம் பற்றி அறியாதவர்களுக்கு திருமணம் செய்து கொள்ளும் நாள் எந்த அளவு மணவாழ்க்கையை பாதிக்கும் என்பதெல்லாம் தெரியாது. நான் ராணுவ தலைமையகத்தில், இறந்தவர்களின் பிறந்த தேதி, மணம் புரிந்த தேதி, காயம்பட்ட தேதி, இறந்ததேதி இவைகளையெல்லாம் ஆயிரக்கணக்கில் ஆராய்ந்தபோதுதான் இந்த நாட்களின் வலிமை புரிந்தது. அதிர்ஷ்டமான தேதிகளில் திருமணமானவர்கள் ஒருவரும் யுத்தக் களத்திலும் அகால மரணம் அடையவில்லை. பிறகு தெரிந்தவர்கள், பழகுகிறவர்கள் குடும்பங்களில் நடந்த அசம்பாவிதங்களையும் கவனித்து பிறகுதான் திருமண நாட்களின் முக்கியத்துவம் பற்றி அதிர்ஷ்ட விஞ்ஞானத்தில் வெளியிட்டேன். ஜாதகப்படி ஆயுள் குறைவுதான் என்று ஜோதிடப்படி நிச்சயமாகச் சொல்லக் கூடியவர்களையும், மங்கல்ய பலமில்லாத பெண்களையும் சரியான தேதியில் விவாகம் செய்து ஏராளமானவர்கள் இன்றும் நன்கு வாழ்கிறார்கள்.

என் அபிமானிகள் பல ஊர்களிலும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மாளிகை, நகை, ஜவுளி வியாபாரங்கள் கல்யாணத் தொடர்புடையவர்களாக இருப்பதால் பெரும்பாலான பத்திரிகைகளை அடைகின்றனர். அவைகளைச் சேகரித்து அந்த விவாகங்களின் கதியை கவனித்து சென்னைக்கு வரும் போதெல்லாம் ஒரு பட்டியல் போல் யார் யார் தீய நாட்களில் மணந்தனர், இறந்தனர், என்பதை தெரிவிப்பார்கள், அவர்களும் கூடியவரை நண்பர்கள் வீடுகளில் தீய நாட்களில் விவாகம் செய்யக் கூடாதென எடுத்துச் சொல்லுவார்கள் பலர் விதி வழியே மதியின் இயக்கமுடையவர்கள் போலும்। இதை அலட்சியம் செய்து பின்பே உணர்ந்திருக்கின்றனர். ஆகையால் இந்நூலை வாசிக்கும் பெற்றோர்களும், விவாகமாகாதவர்களும் தயவு செய்து இந்நூற் கருத்தினை அலட்சியம் செய்யாமல், பின்பற்றினால் நன்கு வாழலாம். என அறிந்து செயல்பட்டால், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற என் அவா பூர்த்தியடையும்.

தனியாக விவாகத்தைப் பற்றிய (குணநலங்கள், குறைபாடுகள், உடல் இயல், புத்திரப்பேறு, பொருத்தம் முதலிய எல்லா அம்சங்களையும் விரிவாக விளக்கும்) நூல் இவ்வருஷ முடிவிற்குள் வெளியிட உத்தேசிக்கிறேன்

நேரில் அடிக்கடி சந்திக்கிறவர்களைத் தவிர, மற்ற பல்லாயிரக்கணக்கான என் அபிமானிகளுக்கு வேறுவிதமான தொடர்பு இல்லாததால் என் மனதிலுள்ள சில விளக்கங்களைத் தெரிவிக்கவே இம் முன்னுரை எழுதப்பட்டுள்ளது.


மனித வாழ்க்கைக்கு இந்நூற் கருத்துக்களைப் போல் உதவக்கூடிய கடவுள்போல மாறாத இயல்புடைய, வாழத் துணைபுரியும் சக்தி வேறெதுவுமில்லை. இதனை உணர்ந்து, நன்கு பூரணமாகப் பின்பற்றி சிறப்பும், தெளிவுடன் மேன்மையும், இடையறாத இன்பமும் பெற்று நீவீர் வாழ்வீர்காள்। உங்கள் வெற்றியே என் இலட்சியம் : என தன்னை பராசக்தி எல்லோருக்கும் இன்பமே நல்குக।

ஆசிரியர்
*பண்டிட் ஸேதுராமன்,*
19,ஸ்ரீ வாசன் தெரு,
மந்தைவெளி,
சென்னை – ௨௮,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய். அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org